செ.வெ.எண்: 20 நாள்: 10.08.2021

**பத்திரிக்கை செய்தி**

தமிழக அரசின் வழிகாட்டுதலின் பேரில், கொரோனா நோய் தொற்று மூன்றாம் அலை பரவுவதை தடுக்கும் பொருட்டு பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் சில வழிப்பாட்டு தலங்களுக்கும் மற்றும் கடற்கரை பகுதிகளுக்கும் பொது மக்கள் செல்வதற்கு ஏற்கனவே அனுமதி இல்லை என்று ஆணை வெளியிடப்பட்டது.

தற்போது, நிலவிவரும் கொரோனா நோய் தொற்று பரவலை கட்டுப்படுத்த எடுக்கப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் தொடர்ச்சியாக, நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள **"அனைத்து மத வழிப்பாட்டு தலங்களிலும்"** வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்று கிழமைகளில் ஆகஸ்ட் 31 ஆம் தேதி வரை பொதுமக்களுக்கான தரிசனம் மற்றும் அனைத்து மதம் சார்ந்த நிகழ்ச்சிகளுக்கும் முற்றிலுமாக ஏற்கனவே தடை செய்யப்பட்டுள்ளது.

வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை பேராலய திருவிழாவையொட்டி 29.08.2021 முதல் 08.09.2021 வரை நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் பொது மக்களுக்கும் அனுமதியில்லை. பேராலயத்தில் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளையும் காணொளி வாயிலாக ஒளிபரப்பலாம்.

வேளாங்கண்ணி பேரூராட்சிக்குட்பட்ட அனைத்து தங்கும் விடுதிகளும் 29.08.2021 முதல் 08.09.2021 வரை திறக்கப்படாது. திருவிழாவை முன்னிட்டு தற்காலிக கடைகள் அமைப்பதற்கும், பிற கடைகள் மற்றும் உணவகங்கள் திறப்பதற்கும் அனுமதியில்லை.

எனவே, நாகப்பட்டினம் மாவட்டத்தில் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த மாவட்ட நிர்வாகம் எடுத்து வரும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு அளிக்கும்படி, நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் **மருத்துவர். அ. அருண் தம்புராஜ் இ.ஆ.ப.,** அவர்கள் அன்புடன் கேட்டுக்கொண்டுள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**